1987 ஏப்ரல் 4]

ரூ. 10.00 இலட்சம் தேவைப்படுவதால் போதிய நிதியின்மை காரணமாக இப்பணியை திட்டப் பணியாக எடுத்து செய்ய இயலவில்லை.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

(அ) உறுப்பினர்கள் விடுதியில் குடிநீர் வசதி.

திருமதி டி. யசோதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கும் விடுதியில் குடிப்பதற்காக வழங்கப்பட்டிருக்கின்ற குடிநீர் மஞ்சள் நிறத்திலே இருக்கின்ற காரணத்தால் அதைச் சட்டமன்ற உறுப்பினர்கள் குடிப்பதற்கு அச்சப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்ற சூழ்நிலை இருக்கிறது. அதன் காரணமாக அங்கே பாதுகாக்கப் பட்ட குடிநீர் கொடுப்பதற்காக நம்முடைய குடிநீர் வசதி வாரியம் சம்பந்தப்பட்ட அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு அமைச்ச ரவர்கள் நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தற்போது தான் அதை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக் கிறார்கள். நல்ல குடிநீர் தான் இதுவரை சட்டமன்ற உறுப்பினர் களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. (குறுக்கீடுகள்) நீங்கள் எல்லாம் சர்க்கார் மாளிகையில் இருக்கிறீர்கள். ஆனால் நான் வாடகை வீட்டில் தான் இருக்கிறேன். ஆகவே சாதாரணத் தண்ணீர்தான் என் வீட்டிற்கு வருகிறது. நல்ல தண்ணீர் கொடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கிறேன்.

(ஆ) ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் பணி நீக்கம்.

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களிடமிருந்து நான் ஒரு விளக்கம் பெற விரும்புகிறேன். கடந்த 1 ஆம் தேதியிலிருந்து ஒப்பந்த அடிப்படையில் பணியில் அமர்த்தப்பட்ட கல்லூரி

[திரு. கே. சுப்பராயன்] [1987 ஏப்ரல் 4

ஆசிரியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்களே, அவர்களை மீண்டும் பணியில் அமர்த்திக்கொள்ளவேண்டுமென்பதற்காக அவர்கள் தொடர்ந்து வேண்டுகோள் விடுத்து வருகிறார்கள். ஆகவே மனிதாபிமான அடிப்படையிலும், நியாயமான அடிப்படையிலும் பரிசீலித்து, மீண்டும் அவர்களைப் பணியிலமர்த்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முற்றிலும் தற்காலிகமாக, ஓராண்டுக்கு மட்டுமே பணி என்ற முறையிலே சென்ற ஆண்டு அவர்கள் பணியில் அமர்த்தப்பட்டார்கள். அவர்களது கோரிக்கை அரசுக்கு வந்திருக்கிறது. அரசு அதைப் பரிசீலித்து வருகிறது.

(இ) பத்திரிகையிலே வந்த ஒரு செய்தி குறித்து.

திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதெல்லாம் தேவையில்லாத விவகாரம். பத்திரிகையிலே வந்ததை வைத்துப் பேச வேண்டாம். அது முறையல்ல. அது அவைக்குறிப்பில் இருக்கத் தேவையில்லை. தமிழ்நாடு தான் நல்ல அட்மினிஸ்ட்ரேஷன் நடத்துகிறது. இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் பெஸ்ட் அட்மினிஸ்ட்ரேஷன் நடத்துகிறது, அசெம்பிளி உட்பட. உலகத்திலேயே மற்ற அசெம்பிளிகளிலே, தமிழ்நாடு அசெம்பிளி தான் சிறந்த அசெம்பிளி. வெளி நாட்டில் எல்லாம் போய்ப் பார்த்துவிட்டுத் தான் சொல்கிறேன். Holland, House of Commons போன்றவைகளைப் பார்த்து விட்டு வந்துதான் சொல்கிறேன். உலகத்திலேயே சிறந்தவர்கள்தான் இங்கேயிருக்கிறார்கள். நல்ல பண்புள்ளவர்கள், அன்புள்ளவர்கள், எதையும் மறக்கக்கூடியவர்கள் தான் இருக்கிறார்கள். வெளிநாட்டு எம்.எல்.ஏ., எம்.பி.-க்களைப் பார்த்தபோது தான் இங்கே இருக்கிறவர்கள் சிறந்த நண்பர்கள் என்று தெரிந்துகொள்ள முடிந்தது. நம் நாட்டைப்போல் சிறந்த நாடு உலகிலேயே கிடையாது. 'We are the best in Character and everything'.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.